பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
27 09 2025 SATURDAY 6.30 PM
<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சரக்கு மற்றும் சேவை வரி கொண்டுவரப்பட்டதால் மக்களின் வரிச்சுமை கணிசமாக குறைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- மக்களின் மேம்பாட்டுக்காக தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர் மாதா அமிர்தானந்தமயி என்று மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் வேளாண்மையையும், விவசாயிகளையும் பாதுகாக்க மாநில அரசு முழு ஈடுபாட்டோடு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

- தமிழகத்தின் நிதிநிலை குறித்து முதலமைச்சர் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

- உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா 2 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி கடந்த 2017-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது முதல், மக்களின் வரிச்சுமை கணிசமாக குறைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஒடிஷா மாநிலம் Jharsuguda -வில் இன்று 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் பேசிய பிரதமர், வரிகள் படிப்படியாக குறைக்கப்பட்டதால், மக்களின் வாழ்க்கை இலகுவாகி இருப்பதாகவும் கூறினார்.

பிஎஸ்என்எல் நிறுவனத்தின் 97 ஆயிரத்து 500, 4-ஜி தொலைத்தொடர்பு கோபுரங்களையும் அவர் தொடங்கிவைத்தார்.

இதன்மூலம் தொலைத்தொடர்பு வசதி மக்களுக்கு தங்கு தடையின்றி கிடைக்கும் என்றும் அவர் இந்நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்.

உலகின் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் மையமாக இந்தியா விளக்குகிறது என்று கூறிய பிரதமர், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 4-ஜி தொழில்நுட்பத்தை பிஎஸ்என்எல் உருவாக்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு விரைவில் அதிவேக இணையதள சேவை கிடைக்கும் என்றும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>>

மக்களின் மேம்பாட்டுக்காகவும், அவர்களின் அதிகாரத்தை உறுதி செய்யவும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டவர் மாதா அமிர்தானந்தமயி என்று மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் கொல்லத்தில் இன்று மாதா அமிர்தானந்தமயின் 72-ஆவது பிறந்த நாள் நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், அவர் ஆற்றிவரும் மருத்துவ சேவை உள்ளிட்ட பணிகள் போற்றுதலுக்குரியவை என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில், டாக்டர் மனிஷா ரமேஷ் எழுதிய ஓர் இதயம் – ஓர் உலகு என்ற ஆன்மிக புத்தகத்தை வெளியிட்டு பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், கோவிட் பெருந்தொற்று காலத்திலும், சுனாமி பாதிப்பின்போதும் மாதா அமிர்தானந்தமயி ஆற்றிய நிவாரணப் பணிகள் என்றும் நினைவுவுரத்தக்கவை என்று குறிப்பிட்டார்

<<<<<<>>>>>>>

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலனை பாதுகாக்க மாநில அரசு முழு ஈடுபாட்டோடு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் இன்று வேளாண் வணிகத் திருவிழாவையொட்டி நடைபெற்ற கண்காட்சியை தொடங்கிவைத்தபின் உரையாற்றிய முதலமைச்சர், உழவுத்தொழிலுக்கும், வேளாண் தொடர்புடைய அனைத்துத்தரப்பினருக்கும் மக்கள் ஒன்றிணைந்து ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தி தொடர்ந்து உயர்ந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

நெல் சாகுபடி கடந்த ஆண்டில் மட்டும் கூடுதலாக ஒரு லட்சத்து 28 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மேட்டூர் அணை திட்டமிட்டபடி குறித்த தேதியில் திறந்துவிடுவதை மாநில அரசு வழக்கமாக கொண்டுள்ளதால், விவசாயிகள் அதிக அளவில் பயன்பெற்று வருவதாகவம் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

*தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் கல்வித்துறையில் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.*

*நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசு கட்டிடங்களை திறந்துவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக மாணவர்கள் உலக அளவில் சாதனை படைத்து வருவதாக தெரிவித்தார்.*

*(Voice Byte – அன்பில் – 26 Sec.)*

*<<<<<<>>>>>>>*

*தமிழகத்தின் நிதிநிலை மற்றும் இதுவரை பெற்றுள்ள கடன் தொகை குறித்தும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த மாதம் வெளியிடப்பட்ட மாநில கணக்கு தணிக்கை அறிக்கையில் மாநிலத்தின் வருவாய் சென்ற ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இதுவரை 37 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியுள்ள நிலையில், அதனை முறையாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் செலவிடவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.*

*மாநிலத்தில் சொத்துவரி, தொழில்வரி, மின்கட்டணம், பதிவு கட்டணம் என அனைத்துக் கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், கூடுதலாக கடன் வாங்குவதற்கு மாநில அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*போக்குவரத்துக்கழகம், மின்சார வாரியம் உள்ளிட்ட அரசுத்துறை நிறுவனங்கள் மூலமாகவும் அதிக அளவு கடன் வாங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.*

*கடன் வாங்குவதை தவிர்த்து சிக்கன நடவடிக்கையில் மாநில அரசு ஈடுபட்டால்தான் மாநிலத்தின் நிதிநிலை பாதுகாக்கப்படும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*<<<<<<>>>>>>>*

*பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.*

*நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது. இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

<<<<<<>>>>>>>

*தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஓரிரு இடங்களில் வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*நீலகிரி, கோவை, தேனி மற்றும் தென்காசி மாவட்ட மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவிததார்.*

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் –48 Sec. )*

<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

*சேலத்தில் சுகாதாரத்துறை சார்பில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டின் நிறைவு விழாவில், சிறப்பாக பணியாற்றிய மருத்துவ அலுவலர்களுக்கு மாநில அமைச்சர் திரு மா.சுப்பிரமணியன் பரிசுகளை வழங்கினார்.*

----------------

*அரியலூர் அரசு கலை கல்லூரியில் நடைபெற்ற தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100-க்கும் மேற்பட்டோருக்கு மாவட்ட ஆட்சியர் திரு ரத்னசாமி பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

------

*மயிலாடுதுறையில் மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கான மிதிவண்டி போட்டியை ஆட்சியர் திரு ஸ்ரீகாந்த் தொடங்கிவைத்தார்.*

-------------

*விழுப்புரம் மாவட்ட விளையாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற மாரத்தான் ஓட்டத்தை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.*

-----------------

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற மிதிவண்டி போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் பரிசுகளை வழங்கினார்.*

-----------

*கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக, குழித்துறை சப்பாத்து பாலத்தில் மூன்றாவது நாளாக போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.*

------------------

*உலக சுற்றுலா தினத்தையொட்டி, கொடைக்கானலில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.*

----------------

*வேலூர் மாவட்டம், காட்பாடியில் போதைப்பொருள் விற்பனை செய்த 14 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.*

*<<<<<<>>>>>>>*

## *விளையாட்டுச் செய்திகள்*

*உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளது.*

*தென்கொரியாவின் Gwangju-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் பிரிவில் Sheetal Devi-யும், ஆடவர் பிரிவில் Toman-னும் தங்கப்பதக்கத்தை வென்றனர்.*

*இப்போட்டியில் ராகேஷ்குமார் வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*கலப்பு இரட்டையர் பிரிவில் Sheetal Devi - Toman இணை வெண்கலப்பதக்கம் வென்றது.*

-----------

*துருக்கி சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Madhurima Sawant – அமெரிக்காவின் Savannah Broadus இணை பட்டம் வென்றது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 7-6, 6-3 என்ற செட் கணக்கில், துருக்கியின் Selina – யுக்ரைனின் Mariia Bergen இணையை வென்றது.*

------

*சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhattacharjee பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*<<<<<<END>>>>>>>*